வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 22.02.2025 - சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

முன்னேற்றத்தை அடைய நிலையான வளர்ச்சியே, ஒரே வழி என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை காலை 11 மணிக்கு நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஒலிபரப்பாக உள்ளது.

பழங்குடியின சமூகத்தினரின் மேம்பாட்டிற்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் திகழ்வதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

**தன்கர் (12)**

முன்னேற்றத்தை அடைய நிலையான வளர்ச்சியே, ஒரே வழி என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார். டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 21ஆவது ஆப்பிரிக்க – ஆசிய கிராமப்புற மேம்பாட்டு அமைப்பின் மாநாட்டில் தொடக்க உரையாற்றிய அவர், கிராமப்புற தொழில்களின் உதவி இல்லாமல், நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்க இயலாது என்றும் அவர் தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு, இயந்திரம் வாயிலாக அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது கடினமாக இருந்த போதிலும், இந்த தொழில்நுட்பங்களே நமக்கு அளப்பரிய வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதாகவும் திரு. ஜக்தீப் தன்கர் குறிப்பிட்டார். உலகளாவிய தெற்கு நாடுகளை சர்வதேச அளவில் முன்னிறுத்துவது, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை என்றும் அவர் கூறினார்.

மன் கீ பாத் (9)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இது மனதின் குரல் நிகழ்ச்சியின் 119ஆவது அத்தியாயம் ஆகும். இந்நிகழ்ச்சி ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் ஆகியவற்றின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், Newsonair மொபைல் செயலியிலும், ஒலிபரப்ப கேட்கலாம். Air செய்திகள், DD செய்திகள் மற்றும் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் Youtube சேனல்களிலும் நேரடியாக ஒலிபரப்ப கேட்கலாம். நிகழ்ச்சியைத் தொடர்ந்து அதன் தமிழாக்கம் ஒலிபரப்பாக உள்ளது.

மோடி (17)

மொழியை வைத்து , பிரிவினையை ஏற்படுத்தும் முயற்சிகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி, வலியுறுத்தி உள்ளார். புதுடெல்லியில் உள்ள விக்யான் பவனில் 98ஆவது அகில பாரதீய மராத்தி சாகித்ய சம்மேளன கூட்டத்தில் உரையாற்றிய அவர், மொழி அடிப்படையில், பகைமையை உருவாக்கும் தவறான கருத்துக்களில் இருந்து, விலகி நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நாட்டின் ஒவ்வொரு மொழியையும் மத்திய அரசு சமமாக பார்க்கிறது என்றும், இந்திய மொழிகள் ஒன்றிலிருந்து மற்றொன்று செழுமை அடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார். மொழி அடிப்படையில், பிரிவினையை ஏற்படுத்த முயற்சிகள் நடக்கும் போதெல்லாம், நமது பகிரப்பட்ட பன்மொழி, பாரம்பரியம், வலுவான எதிர்காலமாக வைக்கப்படுகிறது என்று பிரதமர் தெரிவித்தார். தவறான விவாதங்களை புறந்தள்ளி அனைத்து மொழிகளையும் அரவணைத்து, வளர்ப்பது நமது அனைவரின் கடமை என்றும் பிரதமர் தெரிவித்தார். இந்திய மொழிகளுக்கு இடையே எந்த விரோதமும், பாகுபாடும் இல்லை என்று பிரதமர் குறிப்பிட்டார். அனைத்து மொழிகளையும், தேசிய நீரோட்ட மொழியாக அரசு பார்க்கிறது என்றும் அவர் தெரிவித்தார். மராத்தி உட்பட அனைத்து மொழிகளிலும் கல்வியை மேம்படுத்தி வருவதாக பிரதமர் கூறினார்.

மோடி பயணம் (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல், 3 நாட்களுக்கு மத்திய பிரதேசம், பீகார் மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களுக்கு செல்ல உள்ளார். மத்திய பிரதேசத்தில், சத்தர்பூர் மாவட்டத்தில் உள்ள பாகேஷ்வர் தாமில் மருத்துவ மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நாளை அடிக்கல் நாட்டுகிறார். இந்த நிறுவனத்தில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையில், நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படும். மேலும், சிறப்பு மருத்துவர்களும், அதிநவீன இயந்திரங்களும் இதில் அமைக்கப் பட்டுள்ளன. தொடர்ந்து மத்திய பிரதேசத்தின் போபாலுக்குச் செல்லும் அவர், அங்கு 2 நாள் உலக முதலீட்டாளர்கள் உச்சிமாநாட்டை தொடக்கி வைக்க உள்ளார். வரும் திங்கட்கிழமை பீகாருக்குச் செல்லும் பிரதமர், அங்கு பாகல்பூரில் பிரதமர் கிஸான் திட்டத்தின், 19ஆவது தவணையை விடுவிக்க உள்ளார். இத்திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் உள்ள 9.7 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் 21 ஆயிரத்து 500 கோடிக்கும் மேல் நேரடி நிதி சலுகைகளை பெறுவர். பின்னர், குவஹாத்திக்கு செல்லும் பிரதமர், அங்கு தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுடன் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். தொடர்ந்து வரும் செவ்வாய்க்கிழமை அன்று அஸ்ஸாம் 2.0 முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு உச்சி மாநாட்டையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

## அமித் ஷா (9)

பழங்குடியின சமூகத்தினரின் மேம்பாட்டிற்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் உள்ள குஜராத் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பழங்குடியினர் மற்றும் கிராமப்புற மாணவர்களுடன் அவர் கலந்துரையாடினார். அப்போது பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையிலான அரசு, பழங்குடியினருக்கு அங்கீகாரம் அளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். நாட்டின் வளர்ச்சிக்கு – மாணவர்களே அடித்தளம் அமைப்பதாகவும், அவர்களின் அர்ப்பணிப்பும், கடின உழைப்பும் இந்தியாவை புதிய உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் என்றும், அவர் கூறினார்.

**வேளாண் கண்காட்சி (11)**

இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் திகழ்வதாக மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற 3 நாள் வேளாண் அறிவியல் கண்காட்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், விவசாயிகள் மற்றும் விவசாயம் இல்லாமல் வளர்ந்த இந்தியாவை அடைய முடியாது என்று கூறினார். வரும் 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்க அரசு விவசாயத்துறையில் பல்வேறு முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். இக்கண்காட்சியில், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் நவீன தொழில்நுட்பங்களின் செயல்முறை விளக்கங்கள், நவீன கண்காட்சி, கருத்தரங்கு, வேளாண் தொழில்நுட்ப ஆலோசனைகள் ஆகியவற்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தர்மேந்திர பிரதான் (11)

இந்தியாவை உலக அளவில் கொண்டு செல்ல புதிய தேசிய கல்விக் கொள்கை வகுக்கப் பட்டுள்ளதாக, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். அவர் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற டெல்லி பல்கலைக் கழகத்தின் 101ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றுப் பேசினார். புதிய கல்விக் கொள்கையை செயல்படுத்துவதன் மூலம் வரும் 2047ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டின் மக்கள் தொகையில் 60 சதவிகிதம் பேர் இளைஞர்கள் என்றும், அவர்களில் பலர் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பயின்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற கனவை நனவாக்க மாணவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முருகன் (6)

மத்திய தகவல் – ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், இன்று, நாமக்கல் மாவட்டத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில், பங்கேற்றார். கே.புதுப்பாளையம் பகுதியில், பொதுமக்களுடன் அவர் கலந்துரையாடினார். இந்த கலந்துரையாடலின்போது, அப்பகுதி மக்களின் வசதிக்காக, நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து, 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சமுதாயக் கூடம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

**வேவ்ஸ்** (6)

படைப்பாளிகள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வகையில், ஊடகம் மற்றும் பொழுது போக்குத் துறைக்கான முக்கிய நிகழ்வாக, மும்பையில், வரும் மே 1 முதல் 4ஆம் தேதி வரை நடைபெற உள்ள வேவ்ஸ் உச்சி மாநாட்டிற்கான முன்னோட்டப் படங்களை தயாரிக்க, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சகம், netFlix தளத்துடன் இணைந்து, டிரெய்லர் போட்டி ஒன்றை நடத்துகிறது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

***ஜிப்மர் (7)***

புதுச்சேரி, ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து மருத்துவர்கள் குழு மாதம் இரு சனிக்கிழமைகளில் காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகை புரிந்து காரைக்கால் மக்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாக இன்று காலை 9.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, சர்க்கரை மற்றும் தைராய்டு சம்மந்தமாக மருத்துவர்கள் பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்தனர். மேலும் நாளமில்லா சுப்பிகளில் ஏற்படும் பிரச்சனைகள் குறித்தும், மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர்.

**மகளிர் கிரிக்கெட் (5)**

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில், டெல்லி மற்றும் உத்தரப்பிரதேச அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டிகள் இரவு 7.30 மணிக்கு பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற உள்ளது. முன்னதாக, நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், மும்பை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் நடப்பு சாம்பியன் பெங்களூரு அணியை வீழ்த்தியது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

முன்னேற்றத்தை அடைய நிலையான வளர்ச்சியே, ஒரே வழி என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை காலை 11 மணிக்கு நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஒலிபரப்பாக உள்ளது.

பழங்குடியின சமூகத்தினரின் மேம்பாட்டிற்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் திகழ்வதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / CN / RK**